செ.வெ.எண் 870 நாள். 23.11.2009


தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

பொன்னி, 31, பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை, சென்னை–600 028

தொலைபேசி – 24937471 – தொலைபேசி – 044 – 24936848


## கலைமாமணி விருது வழங்கும் விழா
## செய்திக்குறிப்பு

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் கலைத்துறையில் செயற்கரிய சேவை புரிந்த கலைஞர்களை சிறப்பிக்கும்பொருட்டு மாநில அளவிலான கலைமாமணி விருதினை வழங்கி வருகின்றது. கலைமாமணி விருது வழங்கும் விழா 28.11.2009 (சனிக்கிழமை) மாலை 6.00 மணிக்கு சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறவுள்ளது.

விழாவிற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தலைமையேற்று கலைமாமணி பட்டம் வழங்க உள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலைஞர்களுக்குப் பொற்பதக்கமும், கலைமாமணி விருது பெற்று அகவை முதிர்ந்த நலிந்த கலைஞர்களுக்கு பொற்கிழியும், சிறந்த நாடகக் குழுவிற்குச் சுழற்கேடயமும், சிறந்த கலை நிறுவனத்திற்குக் கேடயமும் வழங்கி விழாப் பேருரையாற்ற அன்புடன் இசைந்துள்ளார்கள்.

இவ்விழாவில் 2007 ஆம் ஆண்டுக்கு 71 கலைஞர்களுக்கு கலைமாமணி விருதும், ஏற்கனவே கலைமாமணி விருது பெற்ற மூத்த கலைஞர்கள் மூன்று பேருக்குத் தலா ரூ.15,000/– வீதம் பொற்கிழித் தொகையும், சிறந்த நாடகக் குழுவிற்குச் சுழற்கேடயமும், சிறந்த கலைநிறுவனத்திற்கு கேடயமும் வழங்கப்படவுள்ளது. மறைந்த கலைமேதைகளின் திருவுருவப் படங்கள் திறந்துவைக்கப்படவுள்ளன.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் விழா ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

(கவிஞர் இளையபாரதி)
உறுப்பினர்–செயலாளர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9